# இளவரசன்

சிறுவர் கலை இலக்கிய அறிவியல் சஞ்சிகை

ஆனி 2010 - இதழ் 07

விலை : 20 /=

## தேசியமட்டத்தில் முதலிடங்கள்



கெலன் சோபியா மரியதாஸ்

யா/ புனித தெரேசாள் பெண்கள் கல்லூரி. அச்சுவேலி.



சிறீகரன் செந்தூரகன்

யா/ ஆவரங்கால் நடராஜ இராமலிங்க வித்தியாலயம்.

அறிமுகம் -01

றொ.மேரி ஜெஸ்மினி.

யா/மெதடிஸ்த பெண்கள் உயர்தர பாடசாலை, பருத்தித்துறை.

மந்திரமா? தந்திரமா?

## பாடசாலை வலம்



# அறிமுகவிழாக் குறிப்புகள்...

**கடந்த 24.05.2010 அன்று யா/மாணிக்கவாசகர் வித்தியா லயத்தில் இளவரசனின் அறிமுகவிழா நிகழ்வு நடைபெற்றது.**



இ.இராகவன்

**தலைமை:** திரு.இ.இராகவன் (பாடசாலை முதல்வர்)

"சிறுவர்களின் ஆற்றல்களை வெளிக்கொண்டு வருவதற்காக இந்த சிறுவர் கலை, இலக்கிய, அறிவியல் சஞ்சிகையானது வெளிவருகிறது. இச்சஞ்சிகையை, மாணவச் செல்வங்களான நீங்கள் ஒவ்வொருவரும் பயன்படுத்தவேண்டும். பாடசாலையின் சாதனைகளை,மாணவர்களின் எழுத்தாற்றல்களை வெளிப்படுத்த இளவரசன் எமக்கு களத்தை அமைத் திருப்பதையிட்டு மகிழ்வடைகிறேன்."



திரு.தவேந்திரராசா

**மதிப்பீட்டுரை:** திரு.தவேந்திரராசா (கோ.க.பணிப்பாளர்,கரவெட்டி)

"சஞ்சிகை வெளியீடானது சாதாரண முயற்சியல்ல.பெரும் பணி. மாணவர்களுக்கென சிறுவர் சஞ்சிகையாக வெளிவரும் இளவரசனின் வருகை மகத்தானது.ஒவ்வொரு இதழ்களிலும் ஒவ்வொரு பாடசாலை இடம்பெறுவது வரவேற்கத்தக்கது. எமது சூழலில் இப்படியான வரவு இல்லை.இது எமக்கான களம்.எமது பிரதேச மாணவி முகப்பில் காணப்படுவது எமது பிரதேசத்தை பெருமைப்படவைக்கிறது.இந்த மாணவியைப்போல மாணவர்கள் ஆகிய நீங்களும் இனிவரும் இதழ்களில் முகப்பில் சாதனையாளராகவரவேணும்"



வேல் நந்தன்

**பதிலுரை:** வேல்நந்தன் (இணையாசிரியர்)

"இளவரசன் என்றால் இளமை, இளவல், இவர்களின் அரசன். அரசன் என்பது ஆளுமை. அதாவது இளமையின் ஆளுமை. இளவல்களின் அரசன்,ஆதிக்கம் என்றும் பொருள்படும். ஆகவே, இது ஒரு பன்மையிலான பெயர். இன்று சிறுவர்களின் களம் என்பது பெரு வெளியாகவே இருக்கிறது. சிறுவர்களின் உலகம் அலாதியானது. அந்த உலகத்தை எவரும் புரிந்து கொள்ளமுடியாது.அவர்களின் மகிழ்வுக்காக, எண்ண வெளிப்பாடுகளுக்கான ஒரு களம்தான் இந்த இளவரசன்"



திருமதி சுமதி மகேஸ்வரன்

**நன்றியுரை:** திருமதி சுமதி மகேஸ்வரன்.(உப அதிபர்)

இன்றைய சிறுவர்கள் நாளைய சிற்பிகள்.அவர்களுக்காக ஒரு சஞ்சிகை வெளிவருவது பெருமகிழ்ச்சியைத்தருகிறது. இளவரசன் வரவு மாணவர்களுக்கு ஒரு வரப்பிரசாதம்.



நிகழ்வில் கலந்துகொண்டவர்களின் ஒரு பகுதியினர்

● கருணை ரவி

ஜீவநதி ஆசிரியர்,
க. பரணிதரன்


இளவரசன்

இது பௌர்ணமிகளின் வானம்

இணையாசிரியர்கள் :
மாவன்னா.
வேல்நந்தன்.
கருணைரவி

ஓவியங்கள் : பிள்ளை
உதயன்

பக்க, அட்டை வடிவமைப்பு :
கருணைரவி

பதிப்பு:
இளவரசன்
வெளியீட்டகம்



தொலைபேசி : 077-9590727
021-4902670

தொடர்பு :
இளவரசன்.
டினு மல்ரி சென்ரர்,
கொடிகாமம் வீதி,
நெல்லியடி,
கரவெட்டி.


அன்பான வாசகர்களே!

வணக்கம்!

நீண்ட இடைவெளிக்குப்பின்

வந்த ஆறாவது இளவரசனுக்கு

நீங்கள் வழங்கிய ஆதரவு

எம்மை மகிழ்ச்சியடைய வைக்கிறது.

முன்னைய இதழை விட

இந்த இதழ் நான்கு பக்கங்களால்

அதிகரித்திருக்கிறது.

இளவரசனின் பக்க அமைவுகளுக்கு

ஏற்ப நீங்கள் ஆக்கங்களை

குட்டிக்கதைகளாக...

கவிதைகளாக...

ஓவியங்களாக...

அறிவியல் விடையங்களாகவும்

இளவரசன்

உங்களிடம் எதிர்ப்பார்க்கிறான்.

பாடசாலைகளில்

சாதனைகள் படைத்த

மாணவர்களின் ஆற்றல்களை

வெளிக்கொணர

பாடசாலை முதல்வர்கள்

எம்முடன் கரம்கோர்க்கும் படி

அன்புடன் கேட்கிறோம்.

ஆசிரியர்

குட்டிக்கதை



# முட்டாள் சிங்கம்

ஒரு காட்டில் நரி ஒன்று வாழ்ந்து வந்தது. மிகவும் தந்திரமுடைய இந்த நரி ஒரு நாள் வழக்கம் போல உணவு தேடி அலைந்தது. இதனால் அது களைப்பு அடைந்தது.

அவ்வேளையில் சிங்கம் ஒன்று ஓடிவந்து நரியின் மீது பாய்ந்தது. திடுக்கிட்ட நரிக்கு ஒரு யோசனை: தான் சிங்கத்தைக்கண்டு பயப்படாதது போல் நடித்தது.

'ஏ சிங்கமே நான் யாரென்று உனக்குத் தெரியுமா? என்னைக்கடவுள், இக்காட்டு அரசனாக நியமித்துள்ளார்! நீ என் மீதா பாய்ந்தாய்? உனக்கு என்ன துணிச்சல்? என்னைக்கொன்றால் நீ உடனே அழிந்து போய்விடுவாய்! நீ செய்த காரியத்துக்காக என்னிடம் மன்னிப்புக் கேட்டுவிட்டு உடனே இங்கிருந்து ஓடிவிடு.' என அதட்டியது.

அதைக் கேட்ட சிங்கம் கோபத்துடன் "என்ன உனக்குப் பைத்தியமா? யாரை நம்பச் சொல்கிறாய்?" என்று கேட்டுக்கொண்டே மீண்டும்அதன் மீது பாய முனைந்தது.

"ஏ! சிங்கமே... பொறு! உனக்கு நம்பிக்கை இல்லையென்றால் என்னுடன் வா. நான் யாரென்று காட்டுகிறேன்." என்று கூறியது நரி.

"அப்படியா?" எனச்சிங்கம் கேட்டது. "ஆமாம், என்னைக்கண்டு எல்லா விலங்குகளும் வணக்கம் சொல்லி விட்டுப் பதுங்குவதைக் காணலாம். நீ என்னுடன்வா" என்றது சிங்கம்.

ஒன்றாகச் சிங்கமும் நரியும் காட்டைச் சுற்றத்தொடங்கின. அவற்றின் எதிரில் ஓநாய் ஒன்று வந்தது. அது சிங்கத்தைக்கண்டு பணிவாக வணங்கிவிட்டு அருகிலிருந்த புதரில் மறைந்தது.

"என்னைக்கண்டு ஓநாய் நடுங்குவதைப்பார்த்தாயா?" என்று கேட்டது நரி. "இந்த நரியைக்கண்டு ஓநாயே நடுங்கிறதே. இது சொன்னது உண்மை

தானோ" என்று நினைத்தது சிங்கம். அவையிரண்டும் தொடர்ந்து நடந்து செல்கையில் எதிரில் யானை ஒன்று வந்தது. அது சிங்கத்தைக் கண்டதும் "காட்டு அரசே வணக்கம்" என்று சொல்லிவிட்டுச் சென்றது.

உடனே நரி சிங்கத்தைப் பார்த்து "பார்த்தாயா? என்னைக்கண்டு யானையே பணிந்து வணக்கம் சொல்கிறது. எல்லாமிருகங்களும் என்னைக் கண்டு நடுங்குகின்றன. இப்போதாவது என்னை இக்காட்டின் அரசன் என்று நம்புகிறாயா?" என்று கேட்டது நரி.

நரியின் இந்த கபட நாடகத்தை உண்மை என்று நம்பிய சிங்கம் "நரி அரசே! உங்களைக்கண்டு எல்லா விலங்குகளும் நடுங்குகின்றன. என்னை மன்னித்துக் கொள்ளுங்கள். இனி நானும் உங்களுக்குப் பணிந்து நடப்பேன்" என்று கூறித் தப்பினோம், பிழைத்தோம் என்று ஓடி மறைந்தது.

"இந்தச் சிங்கம் முட்டாளாக இருந்ததால் உயிர் பிழைத்தேன். இல்லாவிட்டால் நான் தொலைந்தேன்." என்று உணவைத்தேடி அலைய ஆரம்பித்தது நரி.

**இ.தட்சாயினி**

## அம்மாவுக்காக...



அன்பை இன்பமாக்கி
இன்பத்தை கருவாக்கி
கருவை உருவாக்கி
உருவை உடலாக்கி
உடலை இடைதாங்க
இடைக்கிடையே வலி தாக்க
வலிகள் பலியெடுக்க
பக்குவமாய் ஈன்றெடுத்த தாயே!
கண்ணை இமை காப்பதுபோல்
கணப்பொழுதும் கவனித்தாய்
கடவுள் தந்த தாய்மையோடு
நல்ல தாரமாகவும் விளங்கினாய்
உன் அன்போடு என்றும்
உன்னோடு உனக்காக வாழ்வேன்.

**வே.தணிகைக்குமரன்**
யா/கரணவாய் வேதாரணியேஸ்வர வித்தியாலயம்.

## அன்னை

பத்துமாதம் சுமந்து பெற்ற அன்னை
என்னை விட்டுப் போனதேனோ...
அம்மா... என்றழைக்க நீ இல்லை
நீ நடந்த பாத மண்ணை
தினம் முத்தமிட்டே வாழ்கிறேன்.
தாய் அனைவருக்கும் சொர்க்க வீடு
தாய் இல்லா இந்த வாழ்க்கை
எனக்கோ சுடுகாடு!

**சு.துசாந்தி. தரம் : 9B**
யா/மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலை, பருத்தித்துறை.

---

அன்னை என்னும்
மூன்றெழுத்தில் பிறந்தோம்
அன்னை என்னும்
மூன்றெழுத்தால் வளர்ந்தோம்
பள்ளி என்னும்
மூன்றெழுத்தில் கற்றோம்
போட்டி, வெற்றி என்னும்
மூன்றெழுத்தினை எதிர் கொண்டு
சாதனை என்னும்
மூன்றெழுத்தினை சந்தித்தோம்.

**பீ.தேனுஜா. தரம் : 5A**
யா/நெல்லியடி மெ.மி.த.க.பாடசாலை..

## மந்திரமா? தந்திரமா?




## செய்து பாருங்கள்

### தேவை

**ஒரே அளவிலான துண்டுச் சீட்டுக்கள்.**

0 பார்வையாளர்கள் சிலருக்கு துண்டுக் காகிதங்களை விநியோகிக்கவும்.

0 அவர்களுக்குப்பிடித்தமான ஓரிரு வார்த்தைகளை அந்தக்காகிதத்தில் எழுதி நன்றாக சுருட்டச் சொல்லவும்.

0 சுருட்டப்பட்ட காகிதச்சுருள்களை வாங்கி ஒரு டப்பாவில் போட்டுக்கொள்ளுங்கள்.

0 ஒவ்வொரு சுருளாக நீங்கள் எடுத்து, கையில் வைத்துக்கொண்டு பிரிக்காமலேயே படித்துக் காட்டலாம்.

### இரகசியம்

0 நாம் ஏற்கனவே ஒரு நபரிடம் ஒரு வார்த்தையை சொல்லி வைத்தல் வேண்டும். அவர் அதைத்தான் எழுதுவார்.

0 துண்டுக்காகிதத்தை சேகரிக்கும் போது அவர்கொடுக்கும் காகிதத்தை தனியாக வைத்துக் கொள்ளல் வேண்டும்.

0 ஏதாவது ஒரு காகிதத்தை எடுத்து சொல்லி வைத்த அந்த நபரின் எழுத்தை வாசிக்கவும் உடனே அந்தநபர் தான் என்று சொல்லுவார்.

0அவரிடம் பேசிக்கொண்டே அந்தக்காகிதத்தைப் பிரித்து அதில் என்ன எழுதியிருக்கிறது என்பதை படித்துவிடுங்கள்.

0 அதை வைத்து அடுத்த காகிதத்தில் எழுதியிருப்பதாக சொல்லிவிடலாம்.

0 இப்படியே எல்லா காகிதங்களையும் படித்து விடலாம்.

(விளங்க இன்னும் ஒரு தடவை படியுங்கள்)

## விடுகதைகள்

1. ஐந்து வீட்டுக்கு ஒரு முற்றம். அது என்ன?
2. தட்டச் சீறும் பாம்பல்ல அது என்ன?
3. காய்ப்பார் பூப்பார் கலகலப்பார்
   காகம் இருக்கக் கொப்பில்லை. அது என்ன?
4. பச்சை வீட்டுக்கு சிவப்பு வாசல் அது என்ன?
5. நெருப்புக்குள் வீழ்ந்தவனுக்கு நீண்ட நாள் ஆயுள் அது என்ன?

விடைகள்:
1. உள்ளங்கை 2. தீக்குச்சி.
3. நெல்லு 4.கிளி 5.செங்கல்



ம. கோபிகா.
தரம் 4B,
யா/மாணிக்கவாசகர் வித்தியாலயம்,
கரவெட்டி.

# அதிபர், ஆசிரியரின் ஊக்குவிப்பினாலேயே நான் தேசிய மட்டத்தில் முதலிடம் பெற்றேன்.



*சிறீகரன் செந்தாரகன்*

நான், யா/ஆவரங்கால் நடராஜ இராமலிங்க வித்தியாலத்தில் தரம் 11 இல் கல்வி கற்கிறேன். சிறுவயதிலிருந்தே ஓவியத்தில் ஈடுபாடு கொண்டுள்ளேன். ஆசிரியர் திரு.பிரதீபன் அவர்களின் வழிகாட்டலினாலும் அதிபர் அருணந்திசிவம் அவர்களின் ஊக்கப்படுத்தலாலும் மேலும் நான் ஓவியத்தில் அதிக ஆர்வமெடுத்தேன்.

2010 ஆம் ஆண்டு நடாத்தப்பட்ட "வாய்ப் புற்றுநோயைத் தடுப்போம்" என்ற தலைப்பில் நான் வரைந்த ஓவியம் தேசிய மட்டத்தில் முதலிடம் பெற்றதை அறிந்ததும் மிகவும் மகிழ்ச்சியடைந்தேன். நான் முதலிடம் பெற்றதானது எனக்கும் எனது பாடசாலைக்கும் பெருமையைச் சேர்த்தது.

மொனலிசா ஓவியத்தை நன்கு ரசிப்பேன்.ஜோர்ச்கிற் வரைந்த ஓவியங்களும் பிடிக்கும்.மற்றும் இராசையா, மார்க்கு அவர்களுடைய ஓவியங்களும் பிடிக்கும். பத்திரிகைகளில் வரும் காட்டூன்களை இரசிப்பேன்.

மரபு ஓவியங்கள் வரைய பொறுமை வேணும். மரபு ஓவியங்கள் தத்ரூபத்தன்மை கொண்டது. நவீன ஓவியங்கள் அப்படியில்லை. அது கற்பனை வளம் கொண்டது.சிந்திக்கும் ஆற்றலை வளர்க்க வல்லது.

ஓவியத்தில் மட்டுமல்ல விளையாட்டு, கலைத்துறைகளிலும் எனக்கு ஈடுபாடு அதிகம். பாடசாலை மட்டத்திலான விளையாட்டுக்களில் பங்குபற்றியிருக்கிறேன். மாகாண, மாவட்டப் போட்டிகள் எதிலும் பங்குபற்றவில்லை. விளையாட்டுத் துறையிலும் சாதனை படைக்க வேணும் என விரும்புகிறேன்.

நடிப்பில் ஆர்வம் உண்டு. தற்போது "குருவிக்கூடு" எனும் நாடகம் பழகிவருகிறேன். மாணவர் மன்ற நிகழ்ச்சிக்காக தயாரிக்கப் படுகிறது.

ஓவியத்தில் எனக்கு தேசிய மட்டத்தில் முதலிடம் கிடைத்தது போல ஏனைய மாணவர்களும் பல போட்டிகளில் பங்கு கொண்டு பல தேசிய விருதுகளைப் பெற்று எமது பாடசாலைக்கு பெருமை சேர்க்க வேணும் என்பதே எனது விருப்பம்.

## கவிதை

### மனிதநேயம்

கோயிலக்குள் சென்ற நீறு
திருநீறு ஆகியது
கோயிலுக்குச் சென்ற பால்
தீர்த்தம் ஆகியது
கோயிலுக்குச் சென்ற பழங்கள்
பஞ்சா அமிர்தம் ஆகியது
கோயிலுக்குள் சென்ற உணவு
நைவேத்தியம் ஆகியது
கோயிலுக்குள் சென்ற பூக்கள்
சுவாமியின் காலில் பஞ்சனை ஆகியது
கோயிலுக்குள் சென்ற மனிதர்கள் மட்டும்
மிருகம் ஆகின்றனர்

ம.ரமியா.
தரம்: 9B.
யா/மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலை.

### சிந்தனை செய் மானுடா

ஏய் மனிதா!
ஏன் இந்த மாற்றம்?
ஆடம்பர வாழ்க்கை மீது
நீ காட்டும் நாட்டம்.

மின்னுவதெல்லாம் பொன்னென்று
எண்ணி விட்டாயோ? - அல்லது
இதுதான் நிஜம் என்று
நம்பி விட்டாயோ...

பொய்யை மெய்யென்று நம்பாதே
இது நியமில்லா உலகு
நீ வாழும் இவ்வுலகில்
எத்தனையோ போலிகள்!

மனிதா நீ வீண் செலவு செய்து
காலத்தை வீணடிக்காதே
சற்றுச் சிந்தித்துப்பார் - உனது
எதிர்கால சந்ததியை

நீ விதைக்கும் விதையில் உருவாகும்
அவர்கள் - இவ் ஆடம்பரவாழ்க்கையில்
சிக்கத்தான் வேண்டுமா?

ம.கஸ்தூரி.
தரம்:11B.
யா/வடமராட்சி மத்திய மகளிர் கல்லூரி.

## சிரிப்பூ...



சிறுவன்: டாக்டர் நான் சைக்கிள் ஓட்டும்போது தலை சுத்துது

டாக்டர்: ஆச்சரியமா இருக்கே சைக்கிள் ஓடினா வீல் தானே சுத்தும்.



அம்சன்
யா/கரணவாய்
மணியகாரன் தோட்டம்
அ.த.க.பாடசாலை.



ஒருவர்: டேய் சுமன். ஒரு மனிதன் கடைக்கு ஓடிப்போய் என்ன வாங்குவான்.

சுமன்: சாமான் வாங்குவான்?

ஒருவர்: இல்லை. முதலில் மூச்சு வாங்குவான்

பீ. தர்சிகா.
தரம்:10. யா/மெதடிஸ்த பெண்கள்
உயர்தரப்பாடசாலை. பருத்தித்துறை.

# பற்றறி எப்படி இயங்குகிறது?

ரிமோட்டிலும் பொம்மைகளிலும் பயன்படுத்தப்படுவது டோர்ச்லைட் பற்றறிகள் தான். அலேக்ஸாண்டர் வோல்டா என்பவர் துத்தநாகமும் செம்பும் கலந்து இந்த மின்கலத்தை உருவாக்கினார். (மின் சக்தியை அளவிடும் வோல்ட்ஸ் என்ற சொல் அவர் நினைவாக உரு வானதுதான்) வெவ்வேறு மின்னேற்றங்கள் கொண்ட இரு உலோகங்களைக் கொண்ட வெவ்வேறு மின்கலங்களைத் தயாரிக்க முடியும். அதன்படி துத்தநாகமும் செம்பும் கலந்த மின்கலத்தில் மின்சாரத்தைக் கடத்தக் கூடிய மின்னாற்பகுளியாக ஒரு வகை அமில திரவத்தைப் பயன்படுத்தினார் வொல்டா.

அதைக்கையாள்வதும் ஓரிடத்திலிருந்து வேறு இடத்திற்கு எடுத்துச் செல்வதும் சிரமமாக இருந்தது. இதைத் தவிர்க்க மின்னாற்பகுளியாக திரவத்துக்குப் பதிலாக அமிலப்பசையைக் கண்டுபிடித்தார் ஜார்ஜ்ஜஸ் லெக்லாஞ்சே என்பவர்.

மேலும் செம்பு விலை அதிகம் என்பதால் அதற்குப்பதிலாக கிராஃபைட் கரித்தகட்டினை அறிமுகம் செய்தவரும் அவர்தான். பேட்டரியை இயக்கும்போது அதிலுள்ள கிராஃபைட் எலெக்ட்ரானை இழந்து ஆகஸி காரணமாகும். அப்போது துத்தநாக அயனி எலெக்ட்ரானை ஏற்று துத்தநாக ஆக்ஸைடாகப் படியும். பேட்டரிகள் இயங்கும் விதம் இப்படித்தான். பேட்டரிகள் இயங்கும் ஆயுள்காலம் அதில் நிரப்பப்



படும் அமிலப் பசையின் அளவைப் பொறுத்து வேறுபடும் லொக்லாஞ்சே கண்டு பிடித்த இந்த மின்கலத்துக்கு உலர் மின்கலம் என்று பெயர். டார்ச் கருவிகள், பொம்மைகள் போன்றவற்றில் பயன்படுத்தப்படுபவை இந்த உலர்மின் கலங்கள்தாம். கார்போன்ற வாகனங்களில் பயன்படுத்தப்படுபவை நிர்ம மின்கலங்கள்.

ஒவ்வொரு மனிதர்களுக்கும் ரிமோல்ட் கன்ட்ரோலாக யாரேனுமொரு உறவு (அ) ஏதேனுமோர் இலட்சியம் உந்து சக்தியாக இருக்கவேண்டும். அப்போதுதான் மனித பொம்மைகள் நேர்த்தியாக இயங்க முடியும். உங்கள் ரிமோல்ட் எதுவெ வென அடையாளம் கண்டு கொண்டீர்களா?

ர.பிரஞ்ஞன்.
யா/கரணவாய் வேதராணியேஸ்வர வித்தியாலயம்.

## அறிந்து கொள்வோம்



தாம் வாழ்ந்த காலத்திலேயே அதிக ஒஸ்கார் விருது பெற்றவர் வால்ட் டிஸ்னி



ஆபிரிக்காவில் 'ஜெர்பா' என்னும் ஒரு வகை எலிகள் உள்ளன. இந்த எலிகள் தலையைத் திருப்பாமலே பின்னால் உள்ள பொருட்களைப்பார்க்கும். அத்தோடு 10 அடி தூரத்துக்குத் தாவும் திறனும் கொண்டவை.

# குறுக்கெழுத்துப் போட்டி

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 | |
| 7 | 8 | 9 | 10 | 11 | 12 |
| 13 | 14 | 15 | | 17 | 18 |
| 19 | 20 | | | | 24 |
| | 26 | 27 | 28 | 29 | 30 |
| | 32 | | 34 | 35 | 36 |

**02**

## இடமிருந்து வலம்

1. போரினால் அழிவுண்ட நகரம்
7. தேவலோக கன்னி
12. பேணியை இப்படி அழைப்பர் (வலமிருந்து இடம்)
26. கவிதைகளின் வகை(முதலெழுத்து விடுபட்டுள்ளது)
36. பொருட்கள் வாங்கும் இடம் (வலமிருந்து இடம்)

## மேலிருந்து கீழ்

1. கோள்
3. மருத்துவத் தாவரம்
5. முழு முதற்கடவுள்
8. நாள்
12. மனிதரின் பருவங்களில் ஒன்று
28. தூரத்து.
29. பதிலை இப்படியும் அழைப்பர்
32. போதை (கீழிருந்து மேல்)

முகவரி : டினு மல்ரி சென்றர்.
கொடிகாமம் வீதி.
நெல்லியடி.
கரவெட்டி.

**குறுக்கெழுத்துப் போட்டி 02**

பெயர்: ..........................

முகவரி: ..........................

..........................

விடைகளுடன் இக்கூப்பனை இணைத்து அனுப்புங்கள்

## 01 இன் விடைகள்

விடைகள்

இடமிருந்து வலம்
1.சனாதிபதி
13.கடுகதி
19.குடம்
23.திரு
26.துயசி
31.பன்னசாலை
4.பட்டு
15.கம்பன்
17.கதி
18.திருடி
26.தலை
28.பசி

மேலிருந்து கீழ்
1.சடங்கு
3.திலகம்

## தெய்வீகனின் இரண்டு கவிதைகள்

### மரணம்

காந்திக்கு ஒரு
கைத்துப்பாக்கி
யேசுவிற்கு ஒரு
சிலுவை
கட்டப்பொம்மனுக்கு ஒரு
தூக்குமேடை
உனக்கென்ன எனக்கென்ன
மரணத்தைக்கண்டு
அஞ்சாதே
நீ இருக்கும்போது
இது வரப்போவதில்லை
இது வரும்போது
நீயிருக்கப்போவதில்லை.

### நீயும் நானும்

செம்மொழியாய்
செழுமை பெறும்
நம் தமிழே
எத்தனை களம் கண்டும்
நீ மட்டும் தொன்று தொட்டு
வாழ்கின்றாய்
உமை பேசும் நாம் மட்டும்...



தரம் 12,
கலைப்பிரிவு,
யா/தேவரையாளி இந்துக்கல்லூரி.

## அறிமுகம் - 01



றொ. மேரிஜெஸ்மினி

இவர் யா/பருத்தித்துறை மெத டிஸ்த பெண்கள் உயர்தரப்பாட சாலையில் தரம் 10 இல் கல்வி கற்று வருகின்றார்.சிறுவயதிலிருந்தே கவிதை எழுதும் ஆர்வமுள்ளவர். தமிழ்தினப் போட்டிகளில் கவிதை, கட்டுரைகளில் பங்கு பற்றியிருக்கின்றார்.

சிறுவயதிலிருந்தே வாசிப்புப் பழக்கமும் இருப்பதாகக் கூறுமிவர் ஆரம்பங்களில் அம்புலிமாமா, ராணிக் காமிக்ஸ், துப்பறியும் திகில் கதைகள் படித்ததாகவும் பின் பாரதியார், பாரதி தாசன், மு.மேத்தா, அப்துல்ரஹ்மான் போன்றோரின் கவிதைகளை விரும் பிப்படித்ததாகக் கூறுகின்றார். தாயார் சிறுவயதில் வாசிப்புப் பழக்கத்தை ஊக்குவித்ததாகவும் பாடசாலையில் வாசுகி அரவிந்தன் ரீச்சர் ஊக்கப் படுத்துவதோடு நூலகத்தில் இருக் கும் நல்ல புத்தகங்களை அறிமுகம் செய்வதாகவும் கூறுகின்றார்.



## கண்ணீர் மழை

பலவித பறவைகள்
பல்வேறு
வேடந்தாங்கலில் இருந்து
கூடி வாழ்ந்த
கூடுகளைப்பிரிந்து
நீண்ட தூரம் பறந்து
ஒன்றாய் கூடின இங்கு...

துன்ப துயரங்கள்...
பிரிவுகள் எல்லாம் மறந்து
பாசமாய் பழகுகின்றோம்
இன்ப மழையென்றும்...

இன்னும் மூன்றே நொடிகளில்
மூன்று வருடங்கள் பறந்துவிடும்
பல திசைக்கும்
பறவைகள்
பறக்கும் நேரம்
வருகையில்
கண்களில்
கண்ணீர் மழையைவிட
வேறு என்ன வரும்...?

**றொ. மேரிஜெஸ்மினி**

## எனது பாடசாலை

எனது பாடசாலை வடமராட்சியில்
புலோலி என்ற கிராமத்தில் இருக்கின்றது.
எனது பாடசாலையின் பெயர்
யா/புலோலி மெ.மி.த.க.பாடசாலை ஆகும்.
இங்கே 1தொடக்கம் 11ம் ஆண்டுவரை
வகுப்புக்கள் உண்டு.
250 மாணவர்கள் கல்வி கற்கிறார்கள்.
30 ஆசிரியர்கள் கல்வி கற்பிக்கிறார்கள்.
எமது பாடசாலை அதிபரின் பெயர்
திரு. க. சண்முகராஜா.
இங்கே விஞ்ஞானகூடம், நூலகம், சங்கீத
அறை, கணினி அறை போன்றவை உண்டு.
விளையாட்டு மைதானமும் உண்டு
நான் எனது பாடசாலையை நேசிக்கின்றேன்.



ரமேஸ் கஜானி.
தரம் : 02.
யா/புலோலி மெ.மி.த.க.
பாடசாலை.

## எனது வீடு



இது எனது வீடு
நான், எனது அண்ணாக்கள், அப்பா, அம்மா
எல்லோரும் இங்கு வசிக்கிறோம்.
எமது வீடு அழகானது.
எமது வீட்டில் பசு உள்ளது.
எமது வீட்டில் ஓர் தென்னைமரம் உட்பட
அழகான மரங்கள் உள்ளன.
எமது வீட்டில் இரு அறைகளும் ஒரு
சமையலறையும் உள்ளது.
எனது வீட்டிற்கு அருகிலுள்ள
பாடசாலையில்தான் நான் கல்வி
பயில்கிறேன்.
எமது வீட்டின் பின்புறத்தில் ஓர் கோவில்
உள்ளது.
எமது வீட்டை நான் நன்றாக நேசிக்கிறேன்.



சு. அபிரா.
தரம் : 02A.
யா/மாணிக்கவாசகர் வித்தியாலயம்.
கரவெட்டி.

## எனது பாடசாலை

எனது பாடசாலையின் பெயர்
யா/புனித தெரேசாள் மகளிர்க் கல்லூரி
எனது பாடசாலையின் அதிபரின் பெயர்
அருட்சகோதரி மரிய றொசாறியோ.
எனது பாடசாலையில் இரண்டு
மேல்மாடிக்கட்டடங்கள் உண்டு.
எனது பாடசாலையில் 1 தொடக்கம்
உயர்தர வகுப்புக்கள் வரை உண்டு.
எனது பாடசாலையில் சிறுவர் மைதானம்
உண்டு.
எனது பாடசாலையை நான் மிகவும்
நேசிக்கின்றேன்.

ந.வதனி.
தரம் : 03B.
யா/புனித தெரேசாள் மகளிர் கல்லூரி.
அச்சுவேலி.

# செல்லப்பிராணிகள்

## பூனை

பூனையை வீட்டில் செல்லப்பிராணியாக வளர்ப்போம்
பூனை மியா மியா என்று கத்தும்
பூனை எலியைப்பிடிக்கும்

## ஆடு

ஆட்டை வீட்டில் வளர்ப்போம்
ஆட்டுப்பால் சிறந்த உணவு
ஆடு குழை தின்னும்

## முயல்

முயல் வெள்ளை நிறம்
முயல் புல் மேயும்
முயலை செல்லமாக வீட்டில் வளர்ப்போம்

## நாய்

நாயை வீட்டில் காவலுக்கு வளர்ப்போம்
நாய் வள் வள் என்று குரைக்கும்
நாய் இறைச்சியை விரும்பி உண்ணும்

## பசு

பசுவை அன்பாக வளர்ப்போம்
பசு பால் தரும்
பசுவின் பால் பூரண உணவாகும்
பசு புல் மேயும்

## மயில்

மயில் அழகான பறவை. முருகனின் வாகனமுமாகும். மயில் தோகை விரித்து ஆடும்.



**கே.அபீசன்** தரம் : 01A,
யா/புனித தெரேசாள்
மகளிர் கல்லூரி.
அச்சுவேலி.

# வார்த்தை விளையாட்டு

| சு | ரு | ட் | டை | வி | ரி | ய | ன் |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 |

சிலரின் மயிர் காணப்படும் விதம் -1234
துளசிச் செடியின் மறுபெயர் - 15
சுழற்சியின் ஒத்த சொல் - 16
பதில் - 54
ஒரு வகைப்பாம்பு - 5678
ஒரு நச்சுப்பாம்பு - 12345678

01

**கேசவி கணேசலிங்கம்.**
தரம் 9A,
யா/வல்லை சிவகுரு வித்தியாசாலை.

# எங்கள் பாடசாலை

எங்கள் பாடசாலை நோக்கி நாங்கள்
தினமும் விருப்புடனே செல்வோம்
பாடம் பலவும் நாங்கள் வகுப்பில்
கற்று என்றும் மகிழ்வோம்
எங்கள் அருமை ஆசான் சொல்லே
வேதம் என்று நாங்கள்
எண்ணி அவர் சொற்படியே நடப்போம்
பாடம் மட்டும் அன்றி
பாட்டு மற்றும் கதைகள் பலவும்
நாங்கள் இங்கே பயில்வோம்



**அ.ஆர்த்திகன்**
தரம் 2A,
யா/மாணிக்கவாசகர்
வித்தியாலயம்.
கரவெட்டி.

**உலகிலேயே அதிக இலைகள் கொண்ட மரம் சைப்பிரஸ் மரம்தான். இதில் 4 முதல் 5கோடி வரை இலைகள் இருக்கும்**




# யா/மணியகாரன் தோட்டம் அ.த.க.பாடசாலை



அதிபர் திரு கிருஸ்ணாகரன்.



2008ம் ஆண்டு வடமராட்சியின் சிறந்த பாடசாலைகளில் ஒன்றாக தெரிவு செய்து யாழ் அரச அதிபரால் விருது வழங்கப்பட்டது

இப்பாடசாலை 1888 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டது. இப்பாடசாலை வடமராட் சியின் முதற்தர ஆரம்பப் பாடசாலைகளில் ஒன்றாகும்.இப் பாடசாலையின் மாணவர்கள் கல்வி, கலை, விளையாட்டு ஆகிய துறைகளில் சிறந்து விளங்குகின்றனர்.



பாடசாலை அதிபருடன் ஆசிரியர்கள்



சி. அபிநயா - உயரம் பாய்தல்
மாவட்டம் 1ம் இடம்



ர.அம்சன்.
நீளம் பாய்தல், கோலப் போட்டிகளில் 2008, 2009, 2010ம் ஆண்டுகளில், கோட்ட மட்டம், வலய மட்டங்களில் முதலாமிடங்களை வகித்துவருகின்றார்.



க.சாமந்தி. தமிழ்தினப்போட்டி
2009 பேச்சு-மாவட்டம் 2ம் இடம்



ஒரே தடவையில் குருளைச் சாரணர் சின்னம் சூட்டும் வைபவம்
வடமராட்சிப் பாடசாலைகளில் முதலாவதாக நடைபெற்றது



ச.கிசோக். உயரம் பாய்தல்
மாவட்டம் - 3ம் இடம்

# உங்கள் கைவண்ணங்கள்





**த.ஜெருசன்.**
தரம் 1B,
யா/புனித தெரேசாள்
மகளிர் கல்லூரி,
அச்சுவேலி.



**ஸ்ரீ .சாகரா.**
தரம் 1C, யா/சாவகச்சேரி
இந்து ஆரம்ப பாடசாலை



**ஸ்ரீ. வனோஜா.**
தரம் 1C, யா/சாவகச்சேரி
இந்து ஆரம்ப பாடசாலை



**க.மதுஜா**
9B, யா/மெதடிஸ்த பெண்கள்
உயர்தரப்பாடசாலை, பருத்தித்துறை.





**மு.சகாயலெவின்சன்.**
யா/புலோலி மெ.மீ.த.க.பாடசாலை.

குட்டிக்கதை



# பெருமிதம்

அது ஒரு சிறிய ஊர். மாதவன் அங்கு வாழுகின்ற ஒரு சாதாரண மனிதன். ஆனால், நல்ல பண்புகள் அவனிடம் நிறைய இருந்தன. தன்னுடைய சிந்தனைகளின் படியே தனது பிள்ளைகளும் ஒழுக்கமுள்ளவர்களாக, பண்புள்ளவர்களாக வாழவேண்டுமென விரும்பினான்.

அடுத்தவர்களுக்கு உதவி செய்வதில் முன்நிற்பவன் மாதவன். அதே போலவே பிள்ளைகளையும் சிறு வயதிலேயே பழக்கப்படுத்துவதில் ஆர்வமுள்ளவனாக இருந்தான்.

பிள்ளைகள் நல்லவைகளைத் தெரிந்துகொள்ளாதிருப்பதற்குக் காரணம் பெற்றோர்களே என்பதில் அவன் நம்பிக்கையுடையவன்.

தனது மகன் கமலனை மிகவும் கவனமாக வழிநடத்துவான்.அவனை அன்பாக அழைப்பான்.அறிவுரைகளை அமைதியாக எடுத்துச்சொல்வான். அவன் செய்யும் தவறுகளைச் சுட்டிக்காட்டி விளக்குவான்.

கமலனும் தந்தையின் எண்ணங்களுக்கு இசைவாக நடக்கத் தெரிந்து கொண்டான்.

ஒருநாள் கமலன் நண்பர்களுடன் விளையாடிவிட்டு வீட்டுக்கு வந்தான். கை, கால், முகத்தைக்கழுவிக்கொண்டு உடுப்பை மாற்றிக்கொண்டிருந்தான். அப்போது தெருவில் யாரோ கதைப்பது கேட்டது. எட்டிப் பார்த்தான்.

யாரோ ஒருவர் அந்த ஊரில் இருக்கும் திலகநாதன் என்பவரின் வீட்டை விசாரித்துக்கொண்டிருந்தார். வேடிக்கை பார்ப்பதற்காக சில இளைஞர்கள் அவருக்கு தவறான வழியைக் காட்டினார்கள்.

"இதால போய் இடப்பக்கம் திரும்புங்கோ. பிறகு வலப்பக்கம் போங்கோ. ஒரு நாற்சந்திவரும். பிறகு நூறு மீற்றர் போக ஒரு கோயில் வரும். அதாலை நீட்டுக்கு..." இப்படி ஒருவன் சொல்லிக் கொண்டிருந்தான்.

இவற்றையெல்லாம் கவனமாகக் கேட்டுக்கொண்டிருந்த கமலன் அந்த மனிதரில் பரிதாபப்பட்டான். அவர்கள் காட்டிய தவறான பாதை வழியே சென்றால் சில வேளைகளில் ஏதும் ஆபத்துக்கள் அந்த மனிதருக்கு நிகழும். அவர்கள் காட்டியது காட்டுப்பாதை. திருடர்கள் அதிகம், அந்த மனிதரிடம் ஓடிப்போனான் கமலன்.

"எங்கையிருந்து வாறியள்? ஏன் இந்தநேரம் வீட்டிலிருந்து வெளிக்கிட்டனீங்கள். தெரியாத இடமென்றால் நேரத்தோட வந்திருக்கலாமே!" என்றவன் அவரை அழைத்துக்கொண்டுபோய் திலகநாதனின் வீட்டில் விட்டான்.

மகனின் செயலை அவதானித்துக்கொண்டிருந்த மாதவனுக்கு தனது மகனின் பொறுப்புணர்ச்சி மிகுந்த செயல் பிரமிக்க வைத்தது. பெருமைப்பட்டவன் தனது இலட்சியத்தில் தனது மகனும் பங்கெடுத்துக்கொண்டு விட்டான் என்ற பெருமிதப்பூரிப்போடு மகனின் வரவை எதிர்பார்த்து நின்றான்.



யோ.புகழினி.
ஆண்டு : 04.
தும்பளை
சிவப்பிரகாச மகா வித்தியாலயம்.

## அறிந்து கொள்வோம்

- ஆயிரம் தடாகங்களின் நாடு எனப்படும் நாடு எது? ஃபின்லாந்து
- நள்ளிரவில் சூரியன் உதிக்கும் நாடு எது? நோர்வே
- உலகின் கூரை எனப்படுவது யாது? திபெத்
- சீனாவின் துயரம் எனப்படுவது எது? குவாங்கோநதி.
- வெள்ளை யானை நாடு எனப்படும் நாடு எது? தாய்லாந்து
- லில்லிப்பூக்களின் நாடு எனப்படும் நாடு எது? கனடா
- புன்னகை நாடு என சிறப்பிக்கப்படும் நாடு எது? தாய்லாந்து
- புனித நாடு எனப்படும் நாடு எது? பலஸ்தீனம்
- பொற்கோபுர நாடு எனப்படும் நாடு எது? மியன்மார்
- நைல்நதியின் கொடை என அழைக்கப்படும் நாடு எது? எகிப்து

ர. அபிராம் - 4B.
யா/நெல்லியடி மெ.மி.அ.த.க.பாடசாலை

## உங்களுக்குத் தெரியுமா?

- தாவரங்களைப்பயன்படுத்தி கூடு அமைக்கும் பறவை எது? தையல் பறவை
- அழகிய கூடு கட்டும் பறவை எது? தூக்கணாங்குருவி
- கூடு கட்டத் தெரியாத பறவை எது? குயில்
- ஒவ்வொரு வருடமும் முட்டையிட்டு குஞ்சு பொரிக்க கூடு கட்டும் பறவைகள் எவை? காகம், கொக்கு, கழுகு,
- சமுதாயமாக கூடுகட்டி வாழும் பிராணிகள்? தேனி, குளவி.
- சமுதாயமாக வாழும் பிராணிகளின் இயற்கையான வாழ்விடங்கள் ? மரப்பொந்து, மலைக்குகை, பாறை வெடிப்பு
- பிராணிகளால் செயற்கையாக அமைக்கும் வாழிடங்கள் ? கூடுகள், புற்றுக்கள்.

சோ.ஸ்ரீவர்சினி - 5B.
யா/ புனித தெரேசாள் மகளிர் கல்லூரி.
அச்சுவேலி.

## மின்னல்!



- உலகில் தினமும் சுமார் எண்பது இலட்சம் மின்னல் தாக்குதல்கள் ஏற்படுகின்றன. ஒரு முறை மின்னல் தாக்கும்போது உண்டாகும் மின்னழுத்தம் பத்துக்கோடிக்கும் அதிகமான மின்சார பல்புகளை எரிய வைக்கும் பலம் வாய்ந்தவை.

ர.கரிகரன். ஆண்டு -4.
யா/புலோலி கிழக்கு அ.த.க.பாடசாலை.



- கடலில் கப்பல் மேற்கு நோக்கிச் செல்லும் போது எடை அதிகமாகவும் கிழக்கு நோக்கிச் செல்லும்போது எடை குறைவாகவும் இருக்கும். இதற்கு பூமி மேற்கிலிருந்து கிழக்கு நோக்கிச் சுற்றுவதே காரணமாகும்

# மாணவர் அவை



வி.விஸ்ணுசாந். தரம் :1A,
யா/புனித தெரேசாள் பெண்கள்
கல்லூரி - அங் : 05



அ. அபிலசா தரம் :2B,
யா/மாணிக்கவாசகர்
வித்தியாலயம் - அங் : 06



அ. சௌமியா தரம் :3,
யா/மணியகாரன் அ.த.க.
பாடசாலை - அங் : 07



தே. ஐஸ்வர்யா தரம் :09,
யா/வட இந்து மகளிர் கல்லூரி
அங் : 08



ம. ஜினித்தா தரம் :5,
யா/கற்கோவளம் மெ.மி.த.க.
பாடசாலை - அங் : 09



சி. ஆர்த்திகா தரம் :3,
யா/மணியகாரன் அ.த.க.
பாடசாலை - அங் : 10

கவிதை

## அகதி

காடுகள் மேடுகள் என
நிதம் நிதம்
வேட்டுக்கள் தீர்க்க
செல்கள் தினம் தினம்
வீடுகளை சிதைத்திட
அதனால்

ஏங்கிய மக்கள்
வகை. தொகை இன்றி
அலைந்ததனால்
அகதி என்ற பெயர் பெற்றோம்....
உண்மையினை உணர்ந்து
ஒற்றுமையாகி
யாவரும் ஒன்றாய்
நலம் பெறவேண்டும்
போர்ப்பறையற்று...

அமைதிப்பறை முழங்கி
நம் எதிர் காலம்
மிளிர்ந்திட வேண்டும்
பதவி வேட்கை எல்லாம்
நீங்கி
அகதிகள் என்ற
கொடும் பெயர்
எமது அகராதியில் நீங்க
அயராது உழைப்போம்.

ப.சுவர்ணா. 9 A
யா/தும்பளை சிவப்பிரகாச
மகாவித்தியாலயம்.



# பாம்பு தோல் உரிப்பது ஏன்?

பாம்பு தன்னுடைய தோலை உரிப்பதைத்தான் செட்டை உரிப்பதாகக் கூறுகிறோம்.பாம்பு வளரும்போது, அதற்கேற்ப அதன் மேற்தோலும் வளர்வதில்லை.எனவே,புதிய தோலை உண்டாக்கிக் கொண்டு அவ்வப்போது பழைய தோலை, சட்டையைக் கழற்றுவது போல உரிக்கவேண்டியுள்ளது. சில பாம்புகள் ஆண்டில் ஓரிருமுறை இவ்வாறு செய்யும்.ஆறுமுறை தோலுரிக்கும் பாம்புகளும் உள்ளன. உரிக்க வேண்டிய நேரம் நெருங்கும்போது, பாம்பு அதன் தோலின் மேற்புற நிறத்தையும் பளபளப்பையும் இழந்துவிடும். அப்போது அடியில் புதிய தோல் உருவாகிக்கொண்டிருக்கும். அது முழுவதுமாக உருவானதும் பாம்பு தனது உடலில் எண்ணை போன்ற திரவத்தை சுரக்கச் செய்யும். பழைய தோலை புதிய தோலிலிருந்து கழற்றிவிட இது உதவுகிறது. பின்பு, பாம்பு தன் தாடையை பாறையில் தேய்த்து வாயருகே உள்ள சருமம் கழியும் படி செய்யும். பிறகு, தலையை அதற்குள்ளிருந்து வெளிப்படுத்திக் கொண்டு பாறையிடுக்கில் புகுந்து, பழைய மேற்தோல் உடலிலிருந்து விடுபடுமாறு தேய்த்தவாறு வெளிப்படும். இவ்வாறு செய்வதால் அதன் முழுத்தோலும் கழன்றுவிடும்.

## விடுகதைகள்

1. வெள்ளை மனிதனுக்கு கறுப்புத் தொப்பி. அது என்ன?
2. நாலு கால்கள் உண்டு நடக்கத்தெரியாது. அது என்ன?
3. உள்ளே இருந்தால் ஓடித்திரிவான். வெளியே வந்தால் விரைவில் மடிவான் அவன் யார்?
4. மழையில் நனைவான். வெயிலில் விரிவான். வீட்டில் சுருங்குவான். அவன் யார்?
5. தூய்மையில் கறுப்பாவான்.அழுக்கானால் வெள்ளையாவான். அவன் யார்?
6. பல் இருக்கும் கடிக்காது. அது என்ன?
7. இதயம் போல் துடிப்பிருக்கும். இரவு பகல் விழித்திருக்கும். அது என்ன?



செ.சுகன்யா.
தரம்:02
யா/கரணவாய் மணியகாரன்
அ.த.க.பாடசாலை.

விடைகள்
1. தீப்பெட்டி.
2. கதிரை
3. மீன்
4. குடை
5. கரும்பலகை
6. சீப்பு
7. மணிக்கூடு

வில்லியம் ஹார்வி இங்கிலாந்தில் 1578 ஆம் ஆண்டில் பிறந்தார். இவர் தமது பதினைந்தாம் வயதில் கேம்பிரிட்ஜ் பல்கலைக்கழகத்தில் பயின்ற



கலன் குருதி அதன் வழியாக செல்வதையும் வில்லியம் ஹார்வி கண்டறிந்தார். இருதயத்திலிருந்து குருதி தமனிகளின் மூலமாக வெளிச்சென்று சிரைகளின் மூலமாக அது மீண்டும் இருதயத்தை அடைகிறது என்பதையும் வில்லியம் ஹார்வி கண்டறிந்து உலகுக்குக் கூறினார். முதலாம் சார்லஸ் மன்னரின் அபிமானத்திற்குரியவரான வில்லியம் ஹார்வி அவருடனேயே எப்போதும் இருந்தார். சார்லஸ் மன்னர் ஸ்பெய்ன் நாட்டு இளவரசியை திருமணம் செய்து கொள்ள விரும்பினார். ஆனால், அது தோல்வியில் முடிந்தது. எனினும் சார்லஸ் மன்னர் 1625 ஆம் ஆண்டு பிரான்ஸ் நாட்டு மன்னரின் மகளைத் திருமணம் செய்து கொண்டார். இதன் விளைவாக நாட்டில் குழப்பங்களும்

# இருதய நோய் தீர்வுக்கு முன்னோடி

பின்பு இத்தாலியிலுள்ள பாதுவா பல்கலைக்கழகத்திற்குச் சென்று பயின்றார். அதே பல்கலைக்கழகத்திலேயே பேராசிரியராகவும் ஆனார்.

வில்லியம் ஹார்வி முதலாம் சார்லஸ் மன்னரின் அபிமானத்திற்குரிய மருத்துவராகப் பணியாற்றினார். உடற்கூறு தொடர்பாக புதிய செய்திகளை உலகுக்கு அளிக்கவேண்டும் என்ற வெறி அவருக்குள் நாளுக்கு நாள் ஓங்கியது. உயிருள்ள விலங்குகளை அறுத்துப் பரிசோதனை செய்தார். இருதயம் ஒவ்வொரு முறையும் துடிக்கும்போது இரண்டு அவுன்ஸ் குருதி வெளியேற்றப் படுவதையும் ஒரு நாளைக்கு ஆயிரத்து ஐநூறு

கலகங்களும் எற்பட்டன. சார்லஸ் மன்னரைக் கொல்வதற்காக கிளர்ச்சியாளர்கள் முனைந்தனர். அத்துடன் வில்லியம் ஹார்வியையும் அவர்கள் குறிவைத்தனர். இத்தகைய அரசியல் சூழ்நிலை காரணமாக மன்னரின் மருத்துவர் பணியிலிருந்து விலகிக்கொண்டார் வில்லியம் ஹார்வி.

இவரின் முன்னோடியான ஆய்வுகளினால் செயற்கை இருதய வால்வுகள் மற்றும் இயற்கை இருதயத்திற்கு மாறாக செயற்கை இருதயத்தையும் இன்றைய மருத்துவ விஞ்ஞானிகள் கண்டறிந்தனர் என்றால் அது மறுக்க முடியாத உண்மை.



கெலன் சோபியா மரியதாஸ்

# எல்லாத்துறைகளிலும் நாம் பிரகாசிக்க, அதிக அக்கறைகொள்பவர் எமது அதிபர்

நான் யா/அச்சுவேலி புனித தெரேசாள் மகளிர் கல்லூரியின் மாணவி. 2009ம் ஆண்டு நடத்தப்பட்ட ஆங்கிலதினப் போட்டியில் ஆங்கிலத்தில் பிரதிபண்ணுதல் போட்டியில் தேசிய மட்டத்தில் எனக்கு முதலிடம் கிடைத்தது. அந்த முதலிடமானது எனக்கும் எனது பாடசாலைக்கும்தான் பெருமை.

எமது பாடசாலை அதிபர் கல்வியில் மட்டுமல்லாது கலை, விளையாட்டு போன்ற எல்லாத் துறைகளிலும் எம்மை பிரகாசிக்க அதிக அக்கறை எடுப்பவர். அவரின் ஆசிர்வதிப்புத்தான், நான் தேசிய மட்டத்தில் முதலிடம் பெற வைத்தது.

எனக்கு விளையாட்டுத் துறையிலும் அதிக ஈடுபாடு. அதை விட கலைத்துறையில்தான் அதிக ஈடுபாடு. பேச்சு, கட்டுரை, பாஓதல், ஆங்கிலப்பேச்சு, போன்றவற்றிலும் பங்குகொண்டிருக்கிறேன்.

2008,2009 ஆண்டுகளில் நடத்தப்பட்ட பாஓதல் ஆங்கிலப்பேச்சு, ஆங்கிலக் கட்டுரை, ஆங்கிலத்தில் கவிதை சொல்லல் போன்ற போட்டிகளில் கோட்ட மட்டத்தில் முதலிடத்தைப் பெற்றுள்ளேன்.

பாடசாலையின் பான்ட் வாத்திய அணியிலும் இருக்கிறேன். நடிப்புத்துறையிலும் ஆர்வமுண்டு. 2009ம் ஆண்டு நடத்தப்பட்ட ஆங்கில தினப்போட்டியில் நான் நடித்த நாடகம் கோட்ட மட்டத்தில் இரண்டாம் இடத்தைப் பெற்றுள்ளது. தாய்ப் பாத்திரங்களில்தான் கூடுதலாக நடித்திருக்கிறேன்.ஒரு தடவை ஆண் பாத்திரமேற்றும் நடித்துள்ளேன்.

இன்னும் நிறைய பாடசாலைப் போட்டிகளில் பங்குகொண்டு பல பரிசில்களைப்பெற்று பாடசாலைக்குப் பெருமையை சேர்க்க வேணும் என்பதே எனது விருப்பம்.

கவிதை

## மனிதநேயம்

தாழ்மையான குலத்தைக் கண்டு - ஏழைகளைத்
தாழ்த்திப் பேசாதே
தாமாகவே உழைக்கும் அவர்களிடம்
தாராளமாக அன்பு உள்ளது

செழுமையான வாழ்வு கண்டு
செல்வர்களுக்குப் பணியாதே
செல்வங்கள் தாராளம்
செலவழிக்க மனமில்லை

உயர்குலமோ தாழ்குலமோ
உன்னதமான வாழ்க்கைக்கு
உயர்சாதி தேவையில்லை
உண்மை மட்டும் போதும்

மனிதா! உன் வாழ்க்கையில் - புது
மலர்வு வேண்டுமா?
மனிதநேயத்தைக் கடைப்பிடி
மகிழ்ச்சி உன்னைத் தேடிவரும்.

பிரியங்கா கிருஸ்ணகுமார்.
தரம் 9A,
யா/வல்லை சிவகுரு வித்தியாசாலை,

## அறிந்து கொள்வோம்

- ஐரோப்பியாவின் நோயாளி?
  துருக்கி.
- ஐரோப்பாவின் விளையாட்டு மைதானம்?
  சுவிற்சிலாந்து
- ஐரோப்பாவின் போர்க்களம்?
  பெல்ஜியம்
- எகிப்தின் கொடை?
  நைல்நதி
- சூரியன் உதிக்கும் நாடு?
  ஜப்பான்
- சூரியன் மறையும் நாடு?
  இங்கிலாந்து
- நள்ளிரவுச் சூரிய நாடு?
  நோர்வே
- புயலடிக்கும் நகரம்?
  சிக்காக்கோ
- பரிசுத்த பூமி
  பாலஸ்தீனம்

சங்கீதா.
தரம் 7A,
யா/வல்லை சிதம்பராக்கல்லூரி.



பூனை நிதானமாக நடந்தாலும், உணவு உண்ணும்போது ஆற அமர, மென்று தின்னும் பழக்கம் அதற்குக் கிடை

### திருட்டுப்பூனை

யாது. அப்படியே லபக் கென்று விழுங்கும் தன்மை உடையது. பூனைக்குப் பொதுவாக திருட்டுக்குணம் உண்டு. எந்தப் பொருளையும் திருடித்தின்னும் வழக்கமுடையது. அதனால்தான் யாரும் தன்னை விரட்டமுன் தப்பித்துவிடும் நோக்கில், மெல்லாமல் உணவை விழுங்குகிறது.



ரீச்சர் : சீனா எங்கே இருக்குது?
மாணவி : சீயன்னாவுக்கு முன்னால் இருக்குது ரீச்சர்!

நீ. தனுசா.
யா/வதிரி வடக்கு மெ. மி. த. க. பாடசாலை



ஏணி
இதழ் : 8
வெளியீடு : உயர்தர மாணவர் மன்றம்.
யா/விக்னேஸ்வரக்கல்லூரி.
கரவெட்டி.

யா/விக்னேஸ்வரக்கல்லூரியின் உயர்தர மாணவர் மன்றத்தின் வெளியீடாக "ஏணி" சஞ்சிகை மிகவும் அழகான வடிவமைப்புடன் வெளிவந்துள்ளது. இன்றைய அறிவியலுலகின் வெளிப்பாடுகளை பிரதிபலிக்கும் முகப்புப்படங்களுடனும் மாணவர்களின் பல்துறைசார் ஆக்கங்களுடனும் ஆசிரியர்களின் ஆக்கங்களுடனும் நூற்றிநாற்பத்தாறு பக்கங்களுடன் வெளிவந்துள்ளது.

பாடசாலைகளிலிருந்து அநேகமாக கையெழுத்துச் சஞ்சிகைகளே வெளிவருவது வழக்கம்.இப்படியான அச்சுப்பதிப்புடன் வெளிவருவது சஞ்சிகையிலுள்ள ஆர்வமும் இச்சஞ்சிகையூடாக பல்தரப்பட்ட மாணவர்களின் ஆற்றல்களை வெளிப்படுத்தும் முனைப்பு, ஓர்பாடசாலைக்கு இருப்பதையே காட்டுகிறது

இவ் ஏணி சஞ்சிகை ஓராண்டுக்கொன்றாக வெளிவருகிறது. இவ் சஞ்சிகையினூடாக பல மாணவர்கள் எழுத்தாளர்களாகவும் ஆய்வாளராகவும் வெளியீட்டாளர்களாகவும் மிளிர்ந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. இவ் ஏணி சஞ்சிகை பற்றி கல்லூரி முதல்வர் வே.சிவசிதம்பரம் அவர்கள் இப்படிக்கூறுகிறார்

"கல்லூரி வாழ்வு மாணவர் தேடல்கட்கும் புதுமை படைப்பிற்கும் ஒரு களமாக ஆக்கிக்கொடுக்கும்போது அது மாணவரின் ஆளுமைக்கும் புத்தாக்கத்திற்கும் வழிவகுக்கும். இதுவே இன்று நாம் மாணவரை நெறிப்படுத்த வேண்டிய வழி ஆகும்"

இச்சஞ்சிகையிலிருந்து பு.ஜீவனா.13 கலைப்பிரிவிருந்து எழுதிய கவிதை ஒன்று

## தன்னம்பிக்கை

என் நினைவு முற்றத்தில்
ஏக்கத்தின் முட்கள்
பரவிக்கிடக்கின்றன
நாளைக்கான வெற்றிக்கு
இன்றைய தேடலின் வலி
சுகமாகப்பட்டாலும் அது
ஏமாற்றமாக மாறிச் சுடுகின்றது
இதனால் உள்ளத்துணர்வுகளால்
மனக்கோட்டைக்குள்
மண்புழுவாய்த்
துடித்துக்கொண்டிருக்கிறேன்.

ஏணியில் ஏறி வெற்றிப்படிகளைத் தொட்டு
வெற்றியை அடைவதற்கு முன்னர்
ஏணியே சறுக்கிவிழும் அபாயம்போல்
என்மனம் அல்லல்படுகின்றது
மீண்டும் சிந்தனையில் சிதறல்களை
சீர்செய்து வெற்றிப்படிகளை
அடைவதற்கு முன்னால்
மீண்டும் எனக்கான என் வேண்டுகை
இம்முறையாவது உன் கைகளையும்
கால்களையும் மட்டும் நம்பு

ந.அஜந்தகுமார்.
கிளிநொச்சி.

## விளையாட்டு



பாகிஸ்தான் அணியின் ஆரம் பதுடுப்பாட்டவீரர் சல்மன் பட் இதுவரையில் 27டெஸ்ட் போட்டிகளில் கலந்து கொண்டு

### சல்மன்பட்

3 சதங்களையும் 8அரைச்சதங்களையும் பெற்று 1548 மொத்த ஓட்டங்களை இவர் பெற்றுள்ளார். 76 ஒரு நாள் போட்டிகளில் கலந்து கொண்டு 2651 ஓட்டங்களையும் ஒருநாள் போட்டிகளில் 8 சதங்களையும் 13அரைச்சதங்களையும் பெற்றுள்ளார்.

இவர் இலங்கையில் ஆரம்பமாகியுள்ள ஆசியக்கிண்ண கிரிக்கெட் போட்டிகளிலும் இங்கிலாந்துக்கு எதிரான டெஸ்ட் போட்டித்தொடருக்கும் உபதலைவராக நியமிக்கப்பட்டுள்ளார்.



பிரெஞ் பகிரங்க டென்னிஸ் போட்டியில் ஆடவர் ஒற்றையர் ஆட்டத்தில் ஸ்பெய்ன் வீரர் ரஃபாயல்நடால் சம்

### ர.்.பாயல் நடால்

பியன் கிண்ணத்தைக் கைப்பற்றியுள்ளார். பிரான்ஸ்சில் நடைபெற்ற போட்டியில் சுவீடன் நாட்டைச்சேர்ந்த ரொபின் சொடர்லங்க என்பவரை எதிர்த்தாடியபோது 6-4, 6-2, 6-4 என்ற செட் கணக்கில் நாடல் வெற்றியீட்டினார். ஐந்தாறு தடவையாக நாடல் இந்த சம்பியன் கிண்ணத்தைக் கைப்பற்றியுள்ளார்.

இந்த வெற்றிகளையடுத்து டென்னிஸ் தரப்படுத்தல் பட்டியலில் முதல்நிலை வீரர் என்ற நிலைக்கு முன்னேறியுள்ள அதேவேளை, முதல்நிலையிலிருந்த சுவிட்ஸர்லாந்தின் ரொஜர்ஃபெடரர் இரண்டாம் நிலைக்குத் தள்ளப்பட்டார்.



### சர்வதேச வொலிபோல் போட்டிகளில் இலங்கை அணி

இவ்வருடத்தில் நடைபெறவுள்ள சர்வதேச வொலிபோல் போட்டிகளில் இலங்கை அணி பங்கெடுக்கிறது. அதற்கமைவாக செப்டம்பர் 1ஆம் திகதி தொடக்கம் 9ஆம் திகதிவரை தாய்லாந்தில் நடைபெறவுள்ள 15வது ஆசிய கனிஷ்ட ஆடவர் வொலிபோல் போட்டிகள், செப்டம்பர் 12 தொடக்கம் 20வரை வியட்னாமில் நடைபெறவுள்ள மகளிர் வொலிபோல் போட்டிகள், நவம்பரில் ஓமானில் நடைபெறவுள்ள ஆசிய கரையோர வொலிபோல் போட்டிகள் ஆகியவற்றில் இலங்கையணி கலந்துகொள்கிறது.

# நான்கு சீடர்கள்

கதை : சி.பி. செந்தில்குமார். படம் பிள்ளை



## வடமராட்சி நெல்லியடியில்



யாழ் அரசினர் வைத்தியசாலையின் வைத்திய
நிபுணர்கள் வருகை தருகிறார்கள்.

Dr. S. *கேதீஸ்வரன்* (பொது மருத்துவம்)
Dr. S. *ஜெயரட்ணம்* (சத்திர சிகிச்சை)
Dr. B. *ரவிராஜ்* (சத்திர சிகிச்சை)
Dr. A. *சிறீதரன்* (மகப்பேறு)
Dr. K. *சுரேஸ்குமார்* (மகப்பேறு)
Dr. P. *லக்ஸ்மன்* (இருதய நோய்)
Dr. S. *குகதாசன்* (கண்)
Dr.mrs. V. *அச்சுதன்* (தோல்)
Dr. K. *சிவராமன்* (பொதுமருத்துவம்)
Dr. A. *செந்தில்குமரன்* (பல் மருத்துவம்)
Dr. S. *கதிரவேற்பிள்ளை* (M.B.B.S)
(இளைப்பாறிய (D.M.O)
ஆதார வைத்தியசாலை, மந்திகை)

**ஸ்கானிங்...**
**இரத்தம்...**
**சிறுநீர்...**
**பரிசோதனைகளும் உண்டு**

# கஜமுகன் மெடி கெயர்

(மத்திய மகாவித்தியாலய வீதி, நெல்லியடி, கரவெட்டி.)

T.P. 021-2264875

PCST

Our Strength is your Sutisfaction

# PC SOLUTIONS

## TECHNOLOGIES (PVT) LTD

## Computer Sales & Maintenance Center

மத்திய மகாவித்தியாலய வீதி, நெல்லியடி, கரவெட்டி

3
வருட
உத்தரவாதம்





மிகக்குறைந்த
விலையில் கணினிகளை...
கணினி உதிரிப்பாகங்களை...
பெற்றுக்கொள்ளலாம்.



கணினி சார்ந்த அனைத்து தேவைகளுக்கும் நாடவும்!

T.P. - 021-2264999